# பொதுக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“இருமை இருளகற்றி ஒருமை ஒளிபாய்ச்சும் இறைவா என்ற உணர்வோடு பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் மகிழ்வோடு வரவேற்கிறேன்.

திருமுழுக்குப் பெற்றவுடன் தூய ஆவி நிறைந்தவராய் இயேசு தம் பணிவாழ்வைத் தொடங்கினார். அவரின் இந்த மீட்புப் பயணம் இன்றும் தொடருகின்றது. இயேசுவின் பணி யாருக்கானது? எப்படிப்பட்டது? என்ற ஒரு தெளிவை இன்றைய வழிபாடு தெளிவாக்குகிறது.

ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு என்ற தெளிந்த உணர்வுடனும், சிந்தனையுடனும் இயேசு இறைத்திட்டம் நிறைவேற்ற புறப்படுகிறார். மனிதர்கள் முழுவாழ்வு பெறும்போது இறைவன் மகிமை பெறுகின்றார். ஏழைகள் நிறைவாழ்வு பெறும்போது இறையாட்சி முழுமை பெறுகிறது. இயற்கையனைத்தும் முழுவாழ்வு பெறும்போது புதிய வானகமும் புதிய வையகமும் மலர்கிறது. ஆம்! அன்பு சகோதரமே! இறைவனின் மீட்புத் திட்டத்தில் நாமும் பங்கு கொள்ள வேண்டும். நாம் வாழும் சமூகத்தில் இத்தகைய மாற்றங்களை உருவாக்கிட முயற்சி செய்ய வேண்டும் என்ற சிந்தனையோடு இப்பலியில் கலந்திடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவார்த்தை, திருச்சட்டம் இவைகளைச் சரியாகப் புரிந்து அறிந்து மக்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டியது நமது கடமை. எனவே இறைச்சட்டத்தை மதித்து வாழவும், புரிந்து வாழவும் அருள் வேண்டி இறைவாக்கினர் நெகேமியா குரலுக்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

உடலும் உறுப்பும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு உயிர் வாழ்கிறதோ அதே போல நாம் அனைவரும் கிறிஸ்துவின் உடல் என்றும் கிறிஸ்துவை மகிமைப்படுத்த நாம் அனைவரும் ஒரு உடல் போல் ஒற்றுமையோடும் அன்போடும் வாழ வேண்டுமென்று கூறும் திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! எம் தாய் திரு அவை தூய வாழ்வுக்கு சாட்சியாக மாறவும், இறையரசின் மதிப்பீடுகளை இம்மண்ணில் விதைத்திடத் தேவையான அருளை எம் திரு அவைக்குப் பொழிந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் இறைவா! எம் நாட்டில் வாழும் ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், நோயாளிகள் அனைவரும் நல்வாழ்வு அடைந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அருளின் ஊற்றே இறைவா! தீவிரவாதம், கலவரம், பகைமை நீங்கி, அன்பு, அமைதி, சமத்துவம், சகோரத்துவம் நிறைந்த நல்ல உலகம் அமைந்திட அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிப்பின் இறைவா! எங்கள் பாவ செயல்கள், தீய எண்ணங்களை அகற்றி, உம்மைப்போல் பிறரை அன்பு செய்து, மன்னித்து வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com